உ

கடவுள் துணை.

கல்வியும், செல்வமும்.

L1

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
14 FEB 1914
MADRAS.

இஃது.

விருதுபட்டி மகா-ா-ா-ஸ்ரீ

சி. ச. சுப்பையநாடாரவர்கள்,

விருதுபட்டி மகா-ா-ா-ஸ்ரீ

S. கந்தசாமிகுற்றாலவர்மா அவர்கள்,

இவர்களால் எழுதிய,

வியாசங்கள்.

விருதுபட்டி மகா-ா-ா-ஸ்ரீ

வே. வ. சண்முகநாடாரவர்களால்,

விருதுபட்டி ஸ்ரீமான்

இராமலிங்கக்குருக்கள்

அவர்களது,

தானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

0-, 6x
N14.
170145

உ

கடவுள் துணை.

கல்வியும், செல்வமும்.

OFFICE OF THE REGISTRAR OF
REGISTERED
14 FEB 1914
MADRAS

இஃது.

விருதுபட்டி மகா-ா-ா-ஸ்ரீ

சி. ச. சுப்பையநாடாரவர்கள்,

விருதுபட்டி மகா-ா-ா-ஸ்ரீ

S. கந்தசாமிகுற்றாலவர்மா அவர்கள்,

இவர்களால் எழுதிய,

வியாசங்கள்.

விருதுபட்டி மகா-ா-ா-ஸ்ரீ

வே. வ. சண்முகநாடாரவர்களால்,

விருதுபட்டி ஸ்ரீமான்

இராமலிங்கக்குருக்கள்

அவர்களது,

சச்சிதானந்த அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

கடவுள் துணை.

கல்வி.

சர்வ வல்லமையுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகளில் மானிடப்பிறவிதான் விசேஷமானது, இப்படி மேலாகிய பிறவி கிடைத்தும் இம்மை, மறுமைப்பயனை அடைவதற்கு ஏதுவான காரியத்தைத் தெரிந்து, அதை விர்த்தி செய்ய வேண்டியதை மறந்திருப்பது பிறவியின் விசேஷத்திற்குப் பொருத்தம் ஆகுமா ?

உடலுக்கு "உயிர்" எவ்வளவு அவசியமோ இது போலவே உயிருக்கு "கல்வி" அவசியமாகிறது, கல்வி விசேஷ மிருந்தால தான் இம்மை, மறுமைப்பயனை அடைவதற்கு ஏதுவாகும்.

பூர்வம் இந்தியாவை அநேக சிற்றரசர்களால் ஆளப்பட்டகால [illegible]களில் ஜனங்கள் அடைந்த கஷ்டத்தையும், இப்பொழுது மாக்ஷிமை [illegible]கிய ஆங்கிலேயரால் ஆளப்பட்டு வருவதில் அடைந்துவரும் நன்[illegible]மையையும் நோக்கிப்பார்த்தால் அணுவுக்கும் மகாமேருவுக்குமுள்ள [illegible]வித்தியாசம் போலிருக்கிறது. சிறிய கிராம முதல், சுகாதார விஷயமும் மற்றதுங்கவனிக்கும்படி யூனியன் முதலானது ஏற்படுத்தியும் [illegible]வொரு இடத்திற்கும் போக்கு வரத்துக்கு ரோட்டு உண்டு பண்ணியும், கல்விச்சாலைகளும், வைத்திய சாலைகளும், ஏற்படுத்தி விவகாரங்கள் ஒரு கோர்ட்டில் முடிவாகுவது தான் என்பதில்லாமல் மேலுக்கும் போய்ப் பார்க்கலாமென்ற வசதியையும் செய்து இன்னும் ஜனங்களுக்காகவும், ஜனங்களின் ஆதாரத்திற்கான சாமான்கள் போக்கு வரத்திற்காகவும், அதி சீக்கிரமாய்ச் செல்லும் புடியான ரயில், கப்பல் முதலானதுகளை ஏற்படுத்தியும், விவசாய மில்லாது கிடந்த நிலங்களைத் திருத்தியும், பிரயோஜனமில்லாது போய்க்கொண்டிருந்த தண்ணீர்களை விளை நிலங்களுக்குத் திருப்பியும், விளைபொருள் சாமான்கள் அதிகப்படும்படியும் செய்து நாட்டில் பஞ்சம் வாராதிருக்கும் [illegible]மையாகவும், ஜனங்கள் ஒருவர்க்கொருவர் சச்சரவின்றி வசிக்க [illegible]ன்னியாகுமரியிலிருந்து இமையகிரி வரைக்குமானாலும், விப[illegible] குழந்தைமுதலாக யாதொரு பயமின்றி சௌகரியமாய் [illegible]து வசதியும் உண்டு பண்ணியிருப்பதோடுங்கூட [illegible]லாரும் படிக்கலா[illegible]ம், படித்து[illegible]மென்[illegible]

இதனுடைய அருமையென்ன, இவர்களின் கல்வி விசேஷத்தாலல்ல வா, ஒரு கண்டத்திலிருந்து கொண்டு இந்தக் கண்டத்தையும் இன்னும் மற்றக் கண்டங்களையும், ஒற்றுமையோடு கண்ணை இமை காப்பதுபோல் பாதுகாத்துவரக் கூடியதாகயிருக்கிறது.

இப்பேர்ப்பட்ட அருமையான காலத்திலுங்கூட நாம் கல்வி யென்றால் கசக்குமென்ற வாய்ப் பாடமுள்ளவர்களாய் கண்டம் பலவில்லாவிட்டாலும், தங்கள் தங்கள் குடும்பங்களையாவது ஒற்றுமைப்படுத்தி வருமானத்திற்குத் தகுந்தபடி செட்டாய்ச் செலவு செய்து பாதுகாக்கத்தெரியாமல், முக்கியமாய்ப் பிரேதத்திற்கு அலங்கிருதஞ்செய்து அதை வெகு தூரம் தூக்கிச் சுமப்பதோடு சிலருக்கு மதுபான மூட்டி ஆடிவரச் செய்து களிப்படையக் கூடிய தன்மையுள்ளவர்களாகயிருக்கிறோம். வாஸ்தவத்தில் கல்வி விசேஷமிருக்குமானால், இப்படி அனாவசியமான காரியங்களை விசேடிக்கவும், மதுபான மூட்டியாடிவரச்செய்யவும், இது விஷயத்தில் அவர்கள் இணங்கி ஆடும்படியாகவும், ஏற்படுமா? சாதாரணமாய் முன்சீப் கோர்ட்டுகளில் கேசுகள் பைசல் ஆவதற்குப் பெரும்பாலும் இரண்டு மூன்று வருஷத்திற்கு மேலும் ஆகிறது, இதுவும் கேசு அதிகத்தினாலல்லவா இப்படிக்கேசு அதிகப்படுவதற்குக் காரணம். முறை தெரியாது கடன் கொடுப்பதும், வாங்குவதும் இன்னும் மற்றதுகளுமே, கல்வி விசேஷமல்லாதபடியால்தான் முறையில்லாதபடி நடந்து ஆபாசமான காரியங்களில் தலையிட்டுக்கொள்ளவும் பிரயாசையாய்த் தேடிய பொருள்களை கோர்ட்டுச் செலவுகளிலும், இன்னும் மற்ற ஆபாசமான காரியங்களிலும் போக்கக்கூடியதாயிருக்கிறது; ஐரோப்பா முதலிய நாகரீகமான தேசங்களில் வரும்படிக்கு மிஞ்சிச் செலவு செய்து, கடன்படல் வெகு சொற்பம் மேலும் அந்தத் தேசங்களில் சிவில் ரிமினல் கேசுகளும் அதிகம் கிடையாது, அவர்களெல்லாம் பிள்ளைகளுக்குக் கல்வி யென்னும் அழியாத ஆஸ்தியைத்தான் கட்டாயமாய்ச் சேர்த்துவைக்கிறது வழக்கம்.

படித்தவர்களுக்கும், படியாதவர்களுக்கு முள்ள வி[illegible] ஆண்டவனுக்கும், அடுமைகளுக்கு முள்ளதைப் பே[illegible] நவிரவும் நாம் விளை பொருள் செய்வகிலுண்டான[illegible]

[illegible] வறு அ[illegible] [illegible]ற்று முதலாகி[illegible]

[illegible] வுக்கி

ரூபாய் நாலுக்கு விற்று முதலாகிறதை நாம் தோறுங்கவனித்து வியா
கூலப்படக் கூடியதாக யிருக்கிறதே நாமும் கல்வி விசேஷமுள்ள
வர்களாகயிருந்தால் நம்முடைய தேசத்துப் பொருளகள் அன்னிய
நாட்டுக்குப்போய் வறுமை குடிகொண்டவர்களாக யிருப்போமா?
நம்முடைய நாட்டு ஜனங்களில் அநேகர் சிலோன், பர்மா,
பினங்கு, தென்னாப்பிரிகா முதலிய இடங்களுக்குப் போய்
மிருகத்துக்குச் சமானமாய் நடத்தப்பட்டும் வருகிறார்களே, விலை
பொருள் அதிகமுள்ளது நம் இந்தியாவைத் தவிர வேறில்லை. இத்
தனை வளப்பம் பொருந்திய நாடாகயிருந்தும், நம்மள் நாட்டு ஜனங்க
ளில் அநேகர் வயிறுறப் புசிக்க உணவு தேடிக்கொள்ள முடியாத
சக்தியுள்ளவர்களாகயிருப்பதோடு அன்னிய நாடுபோய் மிருகத்துக
குச் சமானமாய் மதிக்கப்படுவதும், என்ன அனியாயம், நம்முடைய
நாட்டிலும் கல்வி விசேஷமிருந்தால் கைத்தொழில் முதலியவேலைகள்
அதிகப்பட்டும் நமக்கு வேண்டிய சாமானகள் பூராவையும், சகாயப்
படும்படி நாமே செய்துகொள்ளவுமாக யேற்பட்டுச் சிரேஷ்டர்களாக
யிருப்பதோடு மிருகத்தைப்போல் நடக்க அன்னிய நாட்டுக்குப்போக
வேண்டியதுமிராதே.

காலதேச வர்த்தமானங்களை நோக்கி நூதனமான காரியங்களைச்
செய்ய அல்லது செய்வோருக்கு ஒத்தாசையாகயிருக்காமல் புராதன
வழக்கங்களையே அனுசரித்து ஒருவர் பிள்ளையார் கோவிலைக்கட்டி
னால் மற்றவர்களும் அதேபடி செய்யவும், ஒருவர் நந்தனவனம் உண்
டுபண்ணினால் மற்றவர்களும் அந்தப்படியே செய்யவுமாக யேற்பட்
டால் நாம் முன்னுக்கு வருவதெப்படி? ஒருவர் பிள்ளையார் கோவிலை
க்கட்டினால், ஒருவர் வைத்தியசாலையை உண்டு பண்ணியும் மற்றொ
ருவர் நந்தனவனத்தைச்செய்தால் அதன்பின்னுள்ளவர்கள் வித்தியா
சாலையையும், ஏற்படுத்தி தன்னையும், தன்னைச் சேர்ந்தவர்களையும்,
மேன்மைப் படுத்தலாமே, வாழ்க்கைச் சுகத்தில் ஏற்படும் குறைச்
சலை வுத்தேசித்து அதை நிவர்த்திக்கும் பொருட்டு, தெய்வ வழி
பாடு செய்து ஏதாவது தருமம் செய்வதாகச் சொல்லி பிரசித்தனை
யும், வித்தியா கைங்கரியமாக யிருக்கட்டுமே இஃ
தெல்லாவத்துக்குப் பிரியத்தையும், ஜனங்களுக்கு சிலாக்கியத்
தையுண்ணக் கூடியதாகவுமிருக்கிறது.

தெண்டத்தால் தீயால் திருடரால் கொள்ளையினால்
பண்டு பிறந்தார்கள் பங்கினால்—கண்ட
செலவால் வியாதியால் செட்டாலழியாத
பொருளதுவே கல்விப்பொருள்.

என்பதுபோல் செய்யப்படுகிற எந்தவிதத் தருமங்களிலும் கல்வித்தருமந்தான் எக்காலத்தும், எவ்விதத்தாலும், நாசத்தை அடையாது, பெற்றுக்கொண்டவர்களுக்கு எப்பொழுதும் கைப்பொருளாகயிருக்கக் கூடியதென்று உறுதி கொள்ளவேண்டும்.

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையோன்—மன்னனுக்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்ற விட மெல்லாஞ் சிறப்பு.

என்னும் முதியோர் வாக்கியத்திற்கு இணங்கவும், உலகத்தில் "சூரியன்" எத்தன்மையாய்ப் பிராகாசிக்கிறானோ அதுபோலவே, கற்றுத்தேர்ந்த மேதாவிகளின் பேரும், பிரக்யாதியும், பிரகாசிக்கிறது. "கோபாலகிருஷ்ண கோக்கலே" என்பவர் நம்மைப்போன்ற குடிஜனங்களில் ஒருவர்தானே, அவர் நமக்கு எந்தவிதச் சாதகத்தையும் செய்துவிடவுமில்லை, அதோடு அவரை நாம் கண்ணால் பார்த்ததுமில்லை, யானாலும் அவர்பேரைக் கேட்டமாத்திரத்தில் அவர் பேரில் நமக்கு எத்தனையோ பிரியமும், விசுவாசமும், ஏற்படுகிறது. இவர் தென்னாப்பிரிகா போனதில் அங்குள்ள நம் தேசத்தார்களின் பேரில் கொடூரமாய் நடத்தப்படுபவர்களுங்கூட இவருக்கு அன்பும் விசுவாசமும் காட்டி இருந்தார்கள். இதுபோலவே கல்விப் பெருக்குள்ள மேதாவிகளுக்குத்தான் சீரும் சிறப்பும் கிடைக்கக் கூடியதாகயிருக்கிறது.

செல்வம் பெறலாம் செங்கோல் செலுத்திடலாம்
நல்வர்த்தகங்கள் நடத்தலாம்—பல்வகையா
நெல்விளையும் பூமியெலா நேர் திருத்தியுண்டிடலாம்
கல்வி நலனிருந்தக்கால்.

என்னும் வாக்கியத்துக்கிணங்கவும், கல்வி விசே[illegible]
[illegible] க்கியத்தை அ[illegible]

நம் வாழ்க்கையில் நமக்கு உயிர்த்துணையானது "மனைவி" இவர்களோடு கூடிக்காலங் களிப்பதில் படித்த ஆணும் படியாத பெண்ணுமாக நேர்ந்பட்டால் அக்குடும்ப பாரமானது, ஒரு வண்டியில், ஒரு காளை மாட்டையும், ஒரு கழுதையையும் பூட்டி நடத்துவது போலாகுமேயொழிய வேறு மேன்மையான துண்டா? காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும் அது காற்றைப் போலவும் பறக்கவேண்டுமென்பது போல பெண்கள் படிக்காமலிருந்துகொண்டு புத்திசாலிகளாகவும், நாகரீகமானவர்களாகவும் இருக்க நினைத்தால் எங்கிருந்து கிடைக்கும் வெளியூர்களிற் போய் வியாபாரம் செய்வதில் அந்த யிடங்களில் திரவியம் காய்க்கும் மரங்களும், மலைகளு மிருப்பதாகவும், இதுகளிலிருந்துதான் திரவியங்கள் எடுத்துக்கொண்டு வருவதாகவும், பெண்கள் நினைக்கிறார்கள், இவர்களும் படித்து புத்திசாலிகளாகயிருந்தால் வியாபாரத்தில் நஷ்டம், செலவு, அழிவு, நிலுவைச் சேதார முதலானது நீக்கி கூட்டாளிகளிருந்தால், அவர்களுக்குப் பங்கு பிரித்துகொடுத்துப் பார்த்தால் வருமானம் வெகு சொற்பமாகத் தான் தேறுமென்று உணர்ந்து கொள்ளுவதோடு கணக்குப் பார்க்காமலும், வருமானத்திற்கு மிஞ்சியும், அனாவசியமான காரியங்களிலும் செலவு செய்யப் பிரயத்தனஞ் செய்யமாட்டார்கள். மேலும், மக்களுக்கு மாதாவே துணை யென்பது போல சிசுப் பருவமான காலங்களில் தாய்மார்களே துணையாகிறது இதில் தாய்மார்கள் படித்தவர்களாகயிருந்தால் குழந்தைகளுக்கு சிசுப்பருவத்திலிருந்தே நடை, உடை, பேச்சு முதலானதுகளை ஆபாசமாகக் கற்பிக்காமல் நாகரீகமாகச் சொல்லிக் கொடுப்பதோடு கல்வி கற்றுக் கொடுப்பதற்குப்போதுமான துணையாகவு மிருப்பார்கள். ஐந்தில் விட்டது ஐம்பதில் வரமாட்டாது என்பது போல் சிசுப் பருவத்தில் கவனிக்காது விட்டது முதுமையில் வரமாட்டாது ஆகையால், சிறுபிராயத்திலிருந்து தான் கல்வி அப்பியாசமாகி வரவேண்டும். சிசுப்பருவத்தில் சம்ரக்ஷணைசெய்து வருவது தாய்மார்களாகயிருப்பதால், முக்கியமாய்த் தாய்மார்களாகிய பெண்களும் அவசியம் படிக்கவேண்டிய தாகயிருக்கிறது, பெண்கள் படித்தால் புருஷர்களுக்கு அதிகச் சிரமமில்லை. அதோடும் [illegible]டைய வருமானமறியாமல் வீடு கட்டுவிக்கவும் நகை முதலி[illegible]ங்கி வரவும் தொந்தரவு கொடுக்கது கடன் படுத்திச் [illegible]னத்திற்குத் த[illegible] குடும்ப [illegible]
[illegible]டு ஆவே[illegible]

ஏற்படுவார்கள் பட்சிகள் எவ்வளவு உயரப் பறந்தாலும் ஆகாயத்திற்குள்தானென்பது போல புருஷர்கள் எவ்வளவு தூரம் போயும், எத்தனை பெருமையாக நடந்தாலும் மனைவியிடம் போய் அவர்களை எதிர்பார்க்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை, நாம் மேன்மையை அடையநினைப்பதில் நம்முடைய மனைவி முதலானவர்கள் கீழ்மையாய் இருக்கும் வரைக்கும் நம்மை மேலுக்குக் கொண்டு போகவிட மாட்டாதென்று சத்தியமாய் அறியவேண்டும்.

இதுபோலவே ஒரு ஜாதி அல்லது ஒரு ஊர் முதலிய தேசங்கள் மேன்மையை அடையவேண்டுமானால் அதிலுள்ள சகலரும்பேதமில்லாமல் ஒற்றுமையாகி, நன்மையான விஷயங்களைக் கவனிக்கவேண்டும்: இப்படிச் சகலரும் ஒற்றுமையாகி நன்மையான விஷயங்களைக் கவனிப்பதில் அபிப்பிராயபேதம் வந்து விடாதபடி மெஜாரிட்டியாரின் தீர்மானத்தை முடிவுக்கு வைத்துக்கொள்ளவேண்டும். மெஜாரிட்டியாரின் தீர்மானத்தை முடிவுக்குக் கொண்டு வராத பக்ஷம் ஒற்றுமைக் குறைச்சல் உண்டாகும்; இப்படி ஒற்றுமைக் குறைச்சல உண்டானபோது பொதுக்காரியங்கள் செவ்வையாய் நடைபெறாது பொதுக் காரியங்கள் செவ்வைப் படாதபோது மேன்மையை அடையவே முடியாது.

நம்மை ஆளப்படும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரவர் களுங் கூட சிறிய, பெரிய காரியங்கள் அத்தனையையும் மேதாவிகளின் அபிப்பிராயத்திற்கு விட்டு அந்தமுடிவிலும் மெஜாரிட்டியாரின் தீர்மானப்படிதான் நடத்தி வருகிறார்கள்.

ஆகையால் பலவிடங்களிலும் சங்கங்கள் ஏற்படுத்தி சகலரும் போதுமான ஒற்றுமையோடு பொதுக்காரியங்களைக் கவனிப்பதோடு மெஜாரிட்டியாரின் தீர்மானத்துக்குக் கட்டுப்படக் கூடியவர்களாகயிருந்தும் சிறிய கிராமமுதலாக வித்தியாசாலைகள் ஏற்படுத்தியும் சிறுவர், சிறுமிகளுக்குக் கட்டாயப் படிப்பாக வைத்து ஆண்கள் 7-வது வகுப்புக்குக் குறையாமலும், பெண்கள் 4-வது வகுப்புக்குக் குறையாமலும், படித்துத் தீரவேண்டுமென்பதை ஒவ்வொருவர் [illegible]ம் உறுதிப்படுத்துவார்களாக.

சுப்பை[illegible]

கடவுள் துணை.

செல்வம்.

எனது அருமைச் சகோதரர்களே !!

செல்வமானது இம்மைப் பிரயோசனத்தையும், மறுமைப் பிரயோசனத்தையுங் கொடுக்கின்ற வஸ்துவாயிருக்கின்றது.

செல்வத்தை யுடையவர்களே, உலக வாழ்வை யுடையவர்களாயிருக்கிறார்கள். செல்வப் பெருக்கையுடையவர்கள், செல்வத்தைக் காப்பாற்ற முயற்சியிலேயே கவலை யுடையவர்களாயிருக்கவேண்டும் ஏனெனில், செல்வமானது எவர்களுக்கும் லேசாய்க்கிடைக்கிறதில்லை அப்படிக் கிடைத்தற் கரிதாய்க் கிடைதத பொருளை, மேன்மேலுஞ் சம்பாதிக்க முயலுவதைப் பார்க்கிலும், அப்பொருளை வைத்துக்காப்பாற்றுவதே முக்கியமான காரியம்: பொருளைக் கொண்டுதான் கல்விசாலை, ஆலயமுதலாயுள்ள தருமங்கள் நடத்தவேண்டும்: அதுபற்றித்தான் முதியோர்களும், (திரைகடலோடியுந் திரவியந்தேடு) என்றும், (பொருள் தனைப்போற்றி வாழ்) என்றும், கூறியுள்ளார்:- பொருளை நாம் எவ்வளவு அன்போடு போற்றிக் காப்பாற்றி வைத்திருக்கின்றோமோ அதுபோல் நம்மை விட்டகலாது அதுவும் நம்மைக்காப்பாற்றிக்கொண்டு நிற்கும். பொருளைக் காப்பாற்றுவது பெண்களின் முக்கியமான கடமையாகும், பெண்கள் படித்திருந்தால் பொருளின் அருமை தெரியும், படியாத பெண்கள் தங்கள்புருஷன் வீட்டைவிட்டுவியாபாரத்துக்கு வெளியேறி விட்டால், பணங்காய்க்கிற மரமிருக்கிறதாகவும், அதில் பணம் பறித்துக் கொண்டு வருவார்களெனறு நினைத்து மிஞ்சிய செலவு செய்வார்கள் போலும, காலணு சம்பாதிக்கப்படும் கஷ்டத்தை நினைப்பார்களானல் யோசியாமல் செலவு செய்யமாட்டார்கள். காவிரிப் பூம் பட்டினத்தில், கோடீசுவரப் பிரபுவாய் வசித்த பட்டினத்தடிகளும், புத்திரசோகத்தால் வருந்தி உலகவாழ்வநித்தியமென நினைத்துப் பொருளை யெல்லாம் வெறுத்துத் துறவு [illegible]ண்ட பின்னரும் பொருளில் லாமையைப் பற்றிப் பின் வருஞ் செய்[illegible]ளைச் சொல்லியிருக்கின்றனர்.

[illegible]ம் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
[illegible]டிக்கல்ல மங்கையர்க் கல்ல நற்காட்சிக் கல்ல
[illegible]க்க சிவனடிக் கல்ல [illegible]ந்தை கெ[illegible]
[illegible]யேன் படி[illegible]

170145

தாயும்பகை கொண்ட பெண்டீர் பெரும்பகை தன்னுடைய
சேயும்பகை யுறவோரும்பகை யிச்சேகமும்பகை
யாயும் பொழுதிலருஞ் செல்வ நீங்கிலிங்கா தலினால். என்றும்,

மாணிக்கவாசகசுவாமிகள் திருக்கோவையாரில்,

முனிவரு மன்னரு முன்னுவபொன்னுன் முடியும் என்றும்,
வறியாரிருமை அறியார் என்றும்,

பாகவதம் கலிதர்ம முரைத்த அத்தியாயத்தில்.

நிறைபொருளுடைய ரென்னிந்தை சொல்லினு
முறையுறு வழக்கென மொழிந்து போற்றுவார்
வறுமை மிக்குடையர் வாய் வழகுகு நன்மொழி
யறமொழி யெனக்கொளா ரதனை யெள்ளுவார். என்றும்,

விவேகசிந்தாமணியில்,

பொருளிலார்க் கின்பமில்லைப் புண்ணிய மில்லையென்று
மருவிய கீர்த்தியில்லை மைந்தரிற் பெருமையில்லை
கருதிய கருமமில்லை கதிபெற வழியுமில்லை
பெரு நிலந்தனிற் சஞ்சார பிரேதமாய்த் திரிகுவாரே. என்றும்

பொன்னுடன் மணியுண்டானால் புலைஞனுங்கிளைஞனென்று
தன்னையும் புகழ்ந்துகொண்டு சாதியின் மணமுஞ்செய்வார்
மனனராயிருந்த பேர்கள் வகைகெட்டுப் போவாராகில்
பின்னையுமாரோ வென்று பேசுவாரேசுவாரே. என்றும்,

சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இப்படி அருமை வாய்ந்த பொருளை நாம் சோம்பலில்லாமல் சுறுசுறுப்பாகச் சம்பாதிக்க வேண்டும். காணி காணியாய்த் தேடித்தான் கோடி கோடியாகச் சேர்க்க வேண்டும். இருபது காணித் துட்டுக்கொண்டது ஒரு கால் துட்டு, கலிப்பணக் காலத்தில் ஒரு பணத்துக்கு எட்டே கால் துட்டு, அப்படி எட்டேகால் துட்டுக்கொண்ட ஒரு பணத்துக்கு அறுபது காசு அப்பேர்ப்பட்ட காசு ஒன்று கொடுத்து அரைக்காசுக்கு வெற்றிலையும், கால் காசுக்குப் பாக்கும், கால்காசுக்குப் புகையிலையும், வாங்கவது வழக்கமாயிருந்து வந்தது, அப்படியிருந்து வந்த கால[illegible] பொருள் அடிக்கடி ஒருவரைவிட்டு ஒருவரிடம் மாறுமவி[illegible]கது. வரவுக்கு மிஞ்சியும், அளவுக்கு மிஞ்சியும், பிரமே[illegible]ம், டம்பங்கருதியும், [illegible]மை கொண்டும், வீண் [illegible] ஒருவரைவி[illegible]

சுறுப்பாய் மாறிமாறி வருகின்றது. சிலர் செல்வம் சகடக்கால்போல வருமென்று சொல்லப்பட்டிருக்கிறதே கல்வி யொன்று மாத்திரந்தானே நிலையுள்ள தென்று சொல்லக்கூடும் ஈன்பார்கள் அதை நான் ஒப்புக் கொள்ளுவேன் அதிகச் செலவு செய்யக்கூடா தென்றதினிமித்தந்தான் சொல்லநேரிட்டது. (1) வரவுக்கு மிஞ்சிய செலவாவது மாசம் பதினைந்து ரூபாவரும்படி யுள்ளவர்கள், பதினாறு ரூபா செலவு செய்கிறது, (2) அளவுக்கு மிஞ்சிய செலவாவது, ஆயிர ரூபா வைத்திருப்பவர்கள், ஆயிரத்திருநூறு ரூபா செலவிட்டு வீடு கட்டல, நகை செய்தல், விவாஹமுடித்தல், (3) பிரயோசனமின்றிய செலவைச்சொல்லப் புகுந்தால் புஸ்தகம் இடந்தராதாகையால் சுருக்கிச் சொல்லுகிறேன். சுற்றத்தார் வீட்டிலாவது, நேயர்கள் வீட்டிலாவது, ஒரு குழந்தைக்கு வைரூரி வார்த்தாலும், சடங்காலும் கூடைக்கணக்கான பழமுதலிய பலாகாரங்களை வாங்கிக்கொண்டு போய் வண்டிக்கணக்காக நிரப்பிவிடுகிறார்கள், அது கொடுத்தவர்களுக்கும் நஷ்டம், வாங்கினவர்களுக்கும் பின்னால் கொடுக்க வேண்டிய ஒரு கடனாகவும், ஆய்விடுகிறது. இதுவல்லாமலும், கல்யாண காலச் செலவைச் சொல்லப்புகுவோமானால், பெரிய வேடிக்கை. பாட்டுக்கச்சேரிக்காயிரம் ஆட்டுக் கச்சேரிக் காயிரம், புல்லாங்குழலுக் காயிரம், நாக சின்னத்துக்காயிரம், இன்னும் மத்தாப்பு, வாணவேடிக்கை, பல்லக்குச் சோடிப்பு, கொட்டகை முதலியவை களுக்கோ கணக்கில்லை, இது மாத்திரமல்ல, ஆசாரிமார்கள் கொள்ளையோ அளவிட முடியாது, வெண்கலச் சாமான் தட்டுமுட்டுகளெல்லாம் வாங்கி வீடு நிறையப் பரப்பிவிடுவார்கள்; முகூர்த்தக்காலென்றும், சாதகருமம் நாமகரணம் அன்னப்பிராசனம், சவுளம், உபநயனம், மாமன் சடங்கென்றும், திருமங்கல்ய தாரணமென்றும், அதில் தாலிகட்டல் ஒன்று செய்தால்மாத்திரம் போதாதாம், தாலி தரித்தல், ஒன்று, மாலைமாற்றுதல் இரண்டு, சாக்ஷி கோரிக் கொள்ளல் மூன்று, கைப்பிடித்துக் கொள்ளல் நான்கு, தாரையேற்றுக் கொள்ளல் ஐந்தும், செய்ய வேண்டுமென்றும், ஏமாற்றிச் காசுபறிக்கும் பார்ப்பார்கள் கொள்ளையோ படுகொலை, இதுவென்ன அறியாமை, சுற்றத்தவர்களை யெல்லாஞ் சூழ்ந்து ஒருவேளைப் போசன மருத்தி அவரவர்கள வழிபடு கடவுள் [illegible]ல் போய் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு சுமங்களங் [illegible]மைந்துனி மார்கள் தொட்டுத் தாலி கட்டுத லல்லவ [illegible]றைமையாகும்.

இந்த நாகரீகமுறைப்படி நடத்தினால் ஐம்பது ரூபாவுக்குள் ஒரு கல்யாண முடிக்கலாமல்லவா, அப்படி முடித்தால் மேற்காட்டிய பிரயோசனமற்ற செலவுப் பணங்களை யெல்லாம் பேங்கில் வட்டிக்கு வைத்தாவது, நஞ்சை நிலங்களை வாங்கியாவது கொடுத்தால் மாப்பிள்ளையும் பெண்ணும், கவலையற்றவர்களாயிருந்து சீவிப்பார்களே, இது நிற்க, செத்த சவத்துக்குச் செய்யுஞ் செலவுகளோ கணக்கில்லை பூச்சப்பரத்துக் கென்றும், தீவர்த்தி மத்தாப்புக் கென்றும் நூற்றுக்கணக்காய்ச் செலவு செய்வது மல்லாமல், கள்ளுச் சாராயமூட்டிக் கொட்டிக் குலவையிடச்செய்து அண்டைவீடு அயல் வீடுகளெல்லாம் போய்ப் பிணப் பறை முழங்கி துக்காவேச முண்டுபண்ணி வஸ்திரங்களைத் தூக்கிச் சுமப்பது மிகவும் அறியாமையும் பொருள் நஷ்டமுமான காரியமே இதுவல்லாமலும், பன்னிரண்டா நாளைக்கு மேற்செய்யுங்கருமங்களாகிய அந்தியேட்டி, பிண்டம், பெலிகருமம், சபிண்டிகரண முதலியவைகளுக்கு, பாப்பார்கள் கூடிக்கொண்டு பிதிர்க்களை மோக்ஷலோகத்துக் கேற்றுகிறோமென்று ஏமாற்றிக் காசு பறிப்பதோ கணக்கில்லை கருமக்காரனுக்கு சுற்றத்தார்கள் கொடுக்கும் சோமன் துப்பட்டாக்களோ சொல்லி முடியாது நூற்றுக்கணக்கான வேஷ்டிகளும், துப்பட்டாக்களும் வந்து சேருகின்றன, ஏழைகளுங் கூடக்கடன் வாங்கியாவது கொடுக்கிறார்கள். அந்தத் துணிகளோ அந்துப் பூச்சி முதலியவைகளுக்கு இரையாகிக் கருமக்காரனுக்குக் கடனைச்சுமத்திவைக்கின்றது, இன்னுஞ்சொல்லப் புகின் சிலருக்கு விபரீதத்தைக் கொடுக்கும். ஆகலால் மரணகாலச் சடங்குகளை வீண் டம்பங்கள் செய்யாமல் பத்து ரூபாவுக்குள் முடித்துக் கொள்வதே விவேகிகளின் கடமையாகும். நகையைப் பற்றிச் சொல்லப் புகுவோமானால் மனம் நிரம்பநோதும். நகை வேண்டியவர்கள் இருபது பவுனில் தண்டொட்டி மேலிடு வகையராச் செய்து கொடுக்க வேண்டுமென்று ஆசாரிமார்களிடத்தில் சொல்வது வழக்கம், அவர்களோ செடிப்பவுன் வாங்கிக் கொடுத்தால் வேலைக்கு நயமாயிருக்கு மென்பார்கள், அந்தப்படியே வாங்கித் தருகிறேனென்று ஒரு பவுன் கிரையம் அதிக மாகக் காசுக்கடையில் கொடுத்து 315 ரூபாவுக்கு 20 செடிப்பவுன் வாங்கி [illegible]டாரிடத்தில் கொடுப்பார்கள். அதை அவர்கள் வாங்கிக்கொண்டு [illegible]கி விட்டதாகப் பாவனை காட்டி காசுக் கடையில் பவுனைக் [illegible]ாய்க் கொடுத்து ரூபா[illegible] பெற்று வட்டிக்குப் [illegible]
[illegible]க்கொடு[illegible]ள் போய்க் கே[illegible]

அயலார்க்குச் செய்யும் நகைகளை யெடுத்துக் காண்பிப்பார்கள். இப்படி ஆறுமாச பரியந்தங் காலங்கடத்திப் பின்பு பவுன் 1-க்கு 14 ரூ விலையுள்ள தங்கத்தை வாங்கி வந்து நகை செய்து கொடுத்து 35 ரூ கூலியும் வாங்கிக் கொள்வார்கள். ஆக 20 பவுன் நகைக்கு 350 ரூ ஆகிறது, இதை மறுபடி விற்கும்போது 250 ரூவுக்குக்கூட விற்பது அகிரத பிரயத்தனமாய் முடிகிறது; இப்படி இரண்டு அல்லது மூன்று தடவை விற்று மாறி மாறி நகை செய்தால் நாலாவது தடவையில் 350 ரூவுக்கு 50 ரூ தான் மீதப்படும். இதற்குமேல் நகையைப்பற்றி விசேடமாக எழுதவேண்டுவதில்லை, டம்பங் கருதிச் செய்யுஞ்செலவாவது அயலார் தன்னை மதிக்கவேண்டுமென்று தன்னிடத்தில் பொருளில்லாவிட்டாலும், மிஞ்சிய வட்டிக்கு வாங்கி பெரும் பணக்காரர்களைப்போல் தானுஞ் செலவிடல்.

பொறுமைகொண்டு செய்புஞ் செலவாவது செட்டாகச் செய்யுஞ்சுபாவ முடையவர்களா யிருந்தாலும் பொறுமை மேலீட்டால் பக்கத்திலுள்ள பயித்திய காரர்களைப் பார்த்துத் தானுஞ் செலவு செய்தல். இத்தியாதி காரியங்களை யெவர்களும் நன்காராய்ந்து தன்னுயுதமுந் தன்கையிற் பொருளும், பிறன் கையிற் கொடுக்கும் பேதையும் பதரே. என்ற வாக்கியத்தைக் கடைப்பிடித்தொழுக எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

திங்கண்மும் மாரிபெய்து செகமெலாந் தழைத்துவாழ்கப்
பொங்கிய செல்வங்கல்விப் பூரண மாய்க்குலாவ
எங்கள்சார் சறையன்செங்கோல் இனிதுநீ டூழிவாழ்க
மங்களமா யென்னாளும் மானிடர் வாழ்கமாதோ.

16—1—14
விருதுபட்டி.

S கந்தசர்மிகுற்றாலவர்மா.

சீதரனுக்கும் கோதண்டனுக்கும்

ரெயில்வே சம்பாஷணை.

சீதரன்:—தம்பி கோதண்டா எங்கே போகின்றாய்?

கோதண்டன்:—அண்ணா நான் திருச்சிக்கு நிலுவைக்கு போகின்றேன்.

சீத:—அப்படியானால் ரெயிலில் அதிக இடைஞ்சலாக இருக்கிறதே, சக்கன் கிளாஸ் டிக்கட் எடுத்துக்கொள்ளக்கூடாதா?

கோ:—எனக்கு இஷ்டமில்லை. என் வரவறிந்து செலவிடுவது தான் முறைமை.

சீத.—இவவருஷத்தில் பதினாயிரம் ரூபா லாபம் கிடைத்திருக்கிறதாகச் சொல்லுகிறார்களே?

கோ:—ஆம் வாஸ்தவந்தான் பதினாயிரம் ரூபாய் கிடைத்த[illegible]லென்ன கிட்டங்கிவாடகை ரூ 1500 சமபளச்சிப்பந்தி ரூ 2[illegible]வைச் சேதாரம் ரூ 1500 வட்டிச்செலவு ரூபா 2500 தரு[illegible]வு ரூபா 500 ஆக ரூபா 8000-ம் போக மீதரூபா 2000-ம், அத[illegible]டாளிக்கு ரூபா 1000-ம் போக எனக்குக்கிடைததது ரூபா[illegible] இதில் என் குடும்பச்செலவுக்கு ரூபா 600 போய்விட்டது[illegible]பேர்ச்செலவும், குலதேவதை கும்பிடப்போன செலவும்[illegible]0 போக மீதம் என்கணக்கில் வரவு வந்திருககிறது ரூபா[illegible]ததெரியாமல் என் பெண்சாதியும் நீர் சொல்லுவதை[illegible]வ பெருக்கமாக நினைத்துககொண்டு பொருளை லட்சியப[illegible]ணமல் வீண்பெருமைபாராட்டி தண்ணீரெடுப்பதற்குக் கூலி[illegible]ல் குத்துவதற்குக் கூலி. சமையல் பண்ணுவதற்குக் கூலி இப்படிக கொடுத்துவிட்டு வருத்தந்தெரியாமல் என்னையும் வருத்தப்படுத்துகிறாள். படியாத பெண்ணைக் கலியாணஞ் செய்ததினாலல்லவா இப்படி அளவு கடந்து செலவிடுகிறாளென்று எனமனது வருத்தமுண்டாகிறது. நாம் கஷ்டப்பட்டு சம்பாத்தியஞ்செய்து கொடுத்ததை சிந்தாமல்வைத்து செட்டாகச்செலவு செய்து மீதப்படுத்தினாலல்லவா நானும் கஷ்டமில்லாமல் இருக்கக்கூடும். அவளைப் போல் நானும் டம்பமாகச்செலவிட்டால் எப்படி முன்னேறுவேன்

சீத:—சரி இதுதான் நல்லமாதிரி இப்படிச்செட்டாக இ[illegible]பதுதான் எனக்கும் பிரியம், இல்லையானால் கடனுக்காளாக வே[illegible]டும் கடன் படுவதைப்பற்றி இராமாயணத்திலுள்ள ஒருகவி ஞ[illegible]கத்துக்கு வருகிறது.

விடங்கொண்ட மீனைப்போலு[illegible]வந்தழல் மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்தள்வாயிற் [illegible]றிய தேரைபோலும்
அடங்கொண்ட ராமபாணம் [illegible]ர்களத் துற்றபோது
கடன்கொண்டார் நெஞ்ச[illegible]ல் கலங்கினா னிலங்கைவேந்தன்.

என்று சொல்லியிரு[illegible]ல் [illegible]னும் இனிமேல் நீ சொல்லிய[illegible]ம் செட்டாக இரு[illegible]மன்று நினைக்கி[illegible]
[illegible]ய் வருகிறபட[illegible]